திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்

நகராட்சி அலுவலகம், புன்செய்ப் புளியம்பட்டி
நாள்.01.04.2022

அன்புடையீர் வணக்கம்,

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் சாதாரண கூட்டம் பிலவ வருடம் பங்குனி மாதம் 21–ந் தேதி 2022-ம் ஆண்டு **ஏப்ரல் மாதம் 04 –ந் தேதி திங்கட் கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கூட்ட பொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

(தி.ஜனார்த்தனன்)

<u>பொருள் எண்.1</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாக கடைகளின இரண்டாம் 3 ஆண்டு குத்தகை காலம் 31.03.2022 உடன் முடிவடைவதால் கீழ்கண்ட விவரப்படி உள்ள குத்தகை உரிமதாரர்கள் மேலும், 01.04.2022 முதல் 31.03.2025 வரை உள்ள 3 ஆண்டுகளுக்கு, மூன்றாவது முறையாக குத்தகையை புதுப்பிக்க கட்டணம் ரூ.1000/– செலுத்தி, தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்து, குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்ய சம்மதித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில் கீழ்கண்ட விவரப்படி உள்ள குத்தகை உரிமதாரர்களுக்கு, மேலும், 01.04.2022 முதல் 31.03.2025 வரை உள்ள 3 ஆண்டுகளுக்கு, மூன்றாவது முறையாக குத்தகையை புதுப்பிக்கவும் மற்றும் 31.03.222ம் தேதிய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் வாடகை நிர்ணயம் செய்து உத்திரவிடவும், மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**01.04.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாவது முறையாக மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பு செய்து 31.03.2022 வாடகையில் 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விவரம்**

| வணிக வளாக கடைகளின் 01.04.2022 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர வாடகை தொகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண். | வரிவிதிப்பு எண் | கடை விபரம் | உரிமதாரர் பெயர் | 31.03.2022ல் மாத வாடகை | 15% உயர்வு | 01.04.2022 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை |
| ஜவகர் மெயின் ரோடு கடைகள் | | | | | | |
| 1 | 2016002 | 2 | ஜெ. திவாகர் | 7015 | 1502 | 8067 |
| 2 | 2016010 | 6 எ | ரா. பழனியப்பன் | 20355 | 3053 | 23408 |
| 3 | 2016011 | 7 | எஸ். சரவணகுமார் | 20355 | 3053 | 23408 |
| 4 | 2016012 | 8 | எம். யுகமூர்த்தி | 19435 | 2915 | 22350 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 2016016 | 12 | ஜி. தர்மலிங்கம் | 22080 | 3312 | 25392 |
| 6 | 2016022 | 18 | எஸ். எம். ஏச். ராஜ்கபூர் | 18975 | 2846 | 21821 |
| 7 | 2016024 | 19 ஏ | முகம்மது சதாம் உசேன் | 8165 | 1225 | 9390 |
| **எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள்** | | | | | | |
| 8 | 2016039 | 3 | ஜி. வேலுச்சாமி | 25415 | 3812 | 29227 |
| 9 | 2016040 | 4 | ஜி. வேலுச்சாமி | 25415 | 3812 | 29227 |
| 10 | 060/BD01/00038 | 5 | எஸ்.,ஜாகீருல்லா | 15000 | 2250 | 17250 |
| **மறைமலையடிகள் தெரு** | | | | | | |
| 11 | 2016052 | 1 | பி. யுவராஜ் | 2990 | 449 | 3439 |
| **திரு.வி.க திடல் கடைகள்** | | | | | | |
| 12 | 2016057 | 1 | எஸ். எம். எச். ராஜ்கபூர் | 19550 | 2933 | 22483 |
| 13 | 2016058 | 2 | வி. ராஜேந்திரன் | 17250 | 2588 | 19838 |
| 14 | 060/BD01/00032 | 10 | ஆர்.சின்னராஜ் | 9300 | 1395 | 10695 |
| **வாரச் சந்தை வணிக வளாக கடைகள்** | | | | | | |
| 15 | 2016070 | 1 | ரங்கநாதன் | 7475 | 1121 | 8596 |
| 16 | 2016071 | 2 | ரங்கநாதன் | 7130 | 1070 | 8200 |
| 17 | 2016072 | 3 | எம். சித்ராதேவி | 3450 | 518 | 3968 |
| 18 | 2016073 | 4 | சாரம்மாள் க/பெ. அமானுல்லா | 9315 | 1397 | 10712 |
| 19 | 060/BD01/00036 | 5 | கே.மாரிமுத்து | 7500 | 1125 | 8625 |
| 20 | 2016076 | 7 | சரத்குமார் | 9315 | 1397 | 10712 |
| 21 | 2016077 | 8 | எம். கோபாலகிருஷ்ணன் | 7130 | 1070 | 8200 |
| 22 | 2016078 | 9 | கணபதி | 3565 | 535 | 4100 |
| **பேருந்து நிலைய வணிகவளாக கடை** | | | | | | |
| 23 | 060/BD01/00024 | 32 | ஆயிசா | 8800 | 1320 | 10120 |

**அலுவலகக்குறிப்பு :**

1. அரசு (நிலை) ஆணை எண்.92 நாள்.03.07.2007 நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை மற்றும் குத்தகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு வணிக வளாகத்தில் உள்ள மேற்படி வரிசை எண் 1 முதல் 22 வரை உள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாகவும், மேலும் மேற்படி வரிசை எண் 23ல் உள்ள கடைக்கு இரண்டாவது முறையாக 3 ஆண்டுகளுக்கு 01.04.2022 முதல் 31.03.2025 வரை நீட்டிப்பு செய்தும், தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்து உத்திரவிட அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்குச் சொந்தமான ஜவகர் மெயின் ரோடு (பழைய கடை) எண்3A,5,5B.9.10.14.20.30 .ஆகிய 8 கடைகள் 31.03.2022 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் ஜவகர் மெயின் ரோடு (பழைய கடை) எண் 3,23,25,27,29 ஆகிய 5 கடைகள் வாடகை நிலுவை உள்ளதால்

நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி 13 கடைகளின் வாடகை நிலுவைத்தொகைக்கு அன்னாரின் வைப்புத்தொகையை ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. நகராட்சிக்குச் சொந்தமான MGR வணிக வளாக கடை எண்.01, 02,08 மற்றும் 14 ஆகிய 4 கடைகள் 31.03.2022 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி 4 கடைகளின் வாடகை நிலுவைத்தொகைக்கு அன்னாரின் வைப்புத்தொகையை ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. நகராட்சிக்குச் சொந்தமான திரு.வி.க திடல் வணிக வளாக கடை எண்.05 மற்றும் மறைமலையடிகள் தெரு கடை எண்.05 ஆகிய 2 கடைகள் 31.03.2022 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி 2 கடைகளின் வாடகை நிலுவைத்தொகைக்கு அன்னாரின் வைப்புத்தொகையை ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
5. மேற்படி 19 கடைகளுக்கும் குத்தகை ஏல நிபந்தனைகளின் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.785/2021/அ1)**

**பொருள் எண்.2**

புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிட அறக்கட்டளை, புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் விண்ணப்பம் நாள்.15.03.2022ல் தற்போது அதிகரித்து வரும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கும் பொருட்டும், சுற்றுப்புறம் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் இயற்கையான சூரிய ஒளியிலிருந்து கிடைக்கும் வெப்ப சக்தியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கவும், அதற்கான முழு செலவையும் புன்செய்ப் புளியம்பட்டி நவீன எரியூட்டுமிட அறக்கட்டளையே ஏற்று சிறப்பாக செயல்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினால் இந்நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதுமில்லை எனவும் கருதப்படுகிறது. எனவே மேற்படி திட்டத்தினை செயல்படுத்த அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.460/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட வணிக வளாக கடைகள் நீண்ட நாட்களாக காலியாக இருந்ததால் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டிருந்தது.

| வ.எண் | வணிக வளாக கடைகள் | கடை எண் |
|---|---|---|
| 1. | ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடைகள் | 13 , 17 |
| 2. | எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள் | 13 |
| 3. | திரு.வி.க திடல் வணிக வளாக கடைகள் | 7 |
| 4. | வாரச்சந்தை வணிக வளாக கடைகள் | 9 (மாடிப்படி கடை) |

தற்போது இக்கடைகள் பொது ஏலத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட கடைகளுக்கு மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார வாரியம், புன்செய்ப் புளியம்பட்டி

அவர்களுக்கு வரைவு கடிதம் வைக்கவும், அதற்குண்டான தொகையினை செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 785/2021/அ1)**

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 4</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.71/2021 நாள்.13.09.2021–ன் படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு ஏற்கனவே திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு 09.03.2022 ஆம் தேதியன்று நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண்.3 (பழைய வார்டு எண்.7), ஜவஹர் வீதியில் உள்ள அண்ணாமலையார் நகர் பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணி | 10.00 |
| | **மொத்தம்** | **10.00** |

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.18698/2021/தி2 நாள்.23.03.2022ல் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு ரூ.21.00 இலட்சத்திற்கு திருத்திய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான கருத்துருவினை தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருவினை அனுப்பி நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள சக்தி லே அவுட் பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணி | 9.00 |
| 2. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, AKR சிட்டியில் பூங்கா பகுதியை சுற்றி கம்பிவேலி அமைத்தல் மற்றும் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணி | 2.00 |
| | **மொத்தம்** | **11.00** |

**(ந.க.எண். 1446/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.
இ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று கருத்துரு அனுப்பியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

## பொருள் எண். 5

நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு அவர்களின் கடித எண்.448 பவானிசாகர் கூட்டுக் குடிநீர் திட்டம்/நி.பொ/கி.கு.தி.கோ/ஈ/2022 நாள்.18.03.2022ல் ஈரோடு மாவட்டம், பவானிசாகர், நம்பியூர் ஒன்றியம் மற்றும் சத்தியமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட 448 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நீர் அளவீடு மற்றும் திட்ட மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலும் கூடுதல் தலைமை செயலர், குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் இத்திட்டத்திற்கு வழியோரமாக உள்ள புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கான குடிநீர் தேவையை இத்திட்டத்தில் சேர்த்து வழங்க வேண்டியுள்ளதால் தங்கள் துறை மூலம் இத்திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் வழங்குமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 508/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் முடிவு செய்யலாம்.

## பொருள் எண். 6

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2021 -2022ன் கீழ் பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு ஒரு வருடத்திற்கு 5000Kg படிகாரம் (ஆலம்) கொள்முதல் செய்தல் பணிக்காக 30.03.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு ஒரு வருடத்திற்கு 5000Kg படிகாரம் (ஆலம்) கொள்முதல் செய்தல் | 1.00 இலட்சம் | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.414/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண். 7

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2021 -2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் CHLORINATION GAS CYLINDER வாங்குதல் பணி (2022–2023) பணிக்காக 30.03.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் CHLORINATION GAS CYLINDER வாங்குதல் பணி (2022–2023) | 3.00 இலட்சம் | ஐ டெக் சிஸ்டம்ஸ், ஈரோடு | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | கம்பேன் இன்டர்நேஷ்னல் | 1.50% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள ஐ டெக் சிஸ்டம்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.413/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண். 8

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2021 -2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள், குழாய் உடைப்புகள் சரி செய்ய 2022 – 2023ம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிக்காக 30.03.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று | 9.00 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள், குழாய் உடைப்புகள் சரி செய்ய 2022 – 2023ம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 3.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.408/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 9</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2021 -2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மின் மோட்டார்கள், ஆழ்குழாய் கிணற்றின் மின் மோட்டார்கள், நகராட்சிக் கட்டிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரி செய்யவும், 2022 – 2023ம் ஆண்டிற்காக பராமரிப்பு பணிக்காக 30.03.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மின் | 7.00 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 3.00% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மோட்டார்கள், ஆழ்குழாய் கிணற்றின் மின் மோட்டார்கள், நகராட்சிக் கட்டிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரி செய்யவும், 2022 – 2023ம் ஆண்டிற்காக பராமரிப்பு பணி | | | |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.409/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 10</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2021 -2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அறை, நகர்மன்ற தலைவர் அறை, அலுவலக கழிப்பிடம் ஆகியவற்றில் மராமத்து பணி மேற்கொள்ளவும், நகர்மன்ற அறைக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் ஆதார் இ–சேவை மைய அறையின் பழுதடைந்த மேற்கூரையில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்காக 30.03.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அறை, நகர்மன்ற தலைவர் அறை, அலுவலக கழிப்பிடம் ஆகியவற்றில் மராமத்து பணி மேற்கொள்ளவும், நகர்மன்ற அறைக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் ஆதார் இ–சேவை மைய அறையின் பழுதடைந்த மேற்கூரையில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 3.00 இலட்சம் | திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 1.70% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.20% குறைவாக வழங்கியுள்ள திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.410/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 11**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2021 -2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் கணினி சார்பு உபகரணங்கள் (Hardware and Software ) 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிக்காக 30.03.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் கணினி சார்பு உபகரணங்கள் (Hardware and Software ) 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி | 2.50 இலட்சம் | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 1.60% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.20% குறைவாக வழங்கியுள்ள திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.411/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2021 -2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வீதியில் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் வடக்கு நோக்கி கூடுதலாக ஐந்து கடைகள் (11–15) கட்டுதல் பணிக்காக 30.03.2022 அன்று மூன்றாம் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வீதியில் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் வடக்கு நோக்கி கூடுதலாக ஐந்து கடைகள் (11–15) கட்டுதல் பணி | 9.70 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.30% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 914/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 13</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு 2022–23ஆம் ஆண்டிற்கு தேவையான புத்தகங்கள், படிவங்கள், எழுது பொருட்கள் வாங்கிக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.505/2022/சி1)**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 14</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு 2022–23ஆம் ஆண்டு கணினி பயன்பாட்டிற்கு தேவையான ஜெராக்ஸ் மிசின், டோனர்கள், C.D மற்றும் இதர உபகரணங்கள் வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.506/2022/சி1)**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 15</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 2021–22ஆம் ஆண்டிற்கு சொத்துவரி ,தொழில் வரி , காலிமனை வரி ,குடிநீர் கட்டணம் , கடை வாடகை ஆகியவற்றை செலுத்த கோரி பொது மக்களுக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்து கொள்ள உத்தேச செலவு ரூ.52000 /–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.440/2022/சி1)**

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண். 16**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான தளவாட பொருட்கள், குப்பை தொட்டிகள், மழைநீர் வடிகால் தூய்மைப்படுத்தும் உபகரணங்கள் அரசு, உள்ளூர் அல்லது வெளியூர் விநியோகஸ்தர்கள் வாயிலாக வாங்கி பயன்படுத்துவதற்கும் 11இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 530/2022/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 17**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.05.2022 முதல் 31.05.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 18**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேலும் ஒரு

மாதம் (01.04.2022 முதல் 30.04.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.05.2022 முதல் 31.05.2022 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 19</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், **01.06.2020** முதல் **31.05.2021** வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் **01.04.2022** முதல் **30.04.2022** வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் **30.04.2022** உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு **01.05.2022** முதல் **31.05.2022** வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந. க. எண்.387/2017/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 20</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**07**, அண்ணாமலையார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் வசதி அமைக்க ரூ.**9.70**இலட்சம் மதிப்பீட்டில் கடந்த **04.08.2021**ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி மேற்கொண்டு தற்போது முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் மழைநீரை வெளியேற்றுவதற்கான இணைப்பு வடிகால் கட்ட நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாத காரணத்தால் மழைநீர் வடியாமல் தேங்கி பொது சுகாதார பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மேற்படி பகுதியில் இணைப்பு வடிகால் கட்டுவதற்கான இடத்தினை அப்பகுதியில் உள்ள பொது மக்கள் கிரைய பத்திரத்தின் மூலம் நகராட்சிக்கு ஒப்படைத்துள்ளனர். எனவே பொது மக்களின் சுகாதார வசதியினை கருத்தில் கொண்டு ஒப்படைக்கப்பட்ட இடத்தில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டமைப்பு ஏற்படுத்தவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**2.50**இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.412/2022/இ1)**

அலுவலக குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31117/2022/அம்ரூத்—2 நாள்.29.03.2022ல் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Un Tied Grant) 2021—2022ன் கீழ் ரூ.22.00 இலட்சம் மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Un Tied Grant) 2022—2023ன் கீழ் ரூ.2.48 இலட்சம் என மொத்தம் ரூ.24.48 இலட்சத்திற்கு கீழ்காணும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பணியின் விபரம்:—

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணி | 24.48 |

மேலும், மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1162/2021/இ1)**

அலுவலகக் குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 22**

TUFIDCO, சென்னை அவர்களின் கடித. எண். TUFIDCO / AMRUT 2.0/ 490/AM(M)/2021 நாள்.29.03.2022ன் படி AMRUT 2.0 திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, AKR CITY பகுதியில் புதியதாக குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் கூடிய பொழுதுபோக்கு பூங்கா அமைத்தல் பணிக்காக ரூ.61.00 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பணியின் விபரம்:—

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, AKR CITY பகுதியில் புதியதாக குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் கூடிய பொழுதுபோக்கு பூங்கா அமைத்தல் பணி | 61.00 |
| | **மொத்தம்** | **61.00** |

**(ந.க.எண்.540/2022/இ1)**

அலுவலகக் குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.

இ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று முன்மொழிவு அனுப்பியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பொருள் எண். 23

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு கீழ்காணும் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள **AMRUT 2.0** திட்டத்தின் கீழ் ரூ.47.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யும் நிலையில் உள்ளது.

1) குடிநீர் தலைமை நிலைய அபிவிருத்தி பணிகள்
2) சுத்திகரிப்பு நிலைய அபிவிருத்தி பணிகள்
3) நீருந்து நிலையம் அபிவிருத்தி பணிகள்
4) நீருந்து குழாய் மாற்றம் செய்தல்
5) புதிதாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல்
6) புதிய பகிர்மான குழாய் அமைத்தல் மற்றும் பழைய பகிர்மான குழாயினை மாற்றம் செய்தல்
7) நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குதல்

எனவே மேற்படி பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமிக்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15.00இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1299/2020/இ1)**

அலுவலகக்குறிப்பு :—

அ) மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண். 24

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியில் 13 BOV (பேட்டரியால் இயங்கும் வாகனங்கள்) வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாகனங்கள் வீட்டுக்கு வீடு முதல் நிலை திடக்கழிவு சேகரிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஓராண்டிற்கு இவ்வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் பராமரிப்பு செய்யவும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1784/2019/எச்1)**

அலுவலகக்குறிப்பு :—

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**இப்படிக்கு,**
**நகர்மன்ற தலைவர்,**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.**